

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபை' நமக்கும் உண்டு!

**தா**வீதுக்கு தேவன் அருளின 'நிச்சயமான கிருபை' (SURE GRACE) என்ற வாசகம் எத்தனை பரவசமானது! (அப்.13:34). தெய்வ கிருபையின் பொருள் 'ஏற்ற சமயத்தில்' உதவிடும் கர்த்தரின் கரம்! என்றே எபி.4:16 கூறுகிறது! ஆட்டிடையனான தாவீது, சின்னப் பையனாயிருக்கும்போதே, தன் கர்த்தரின் உதவிக்கரத்தை ஒரு சிங்கத்தை எதிர்கொண்டபோது, அதைக் கொன்று கிருபையை அனுபவித்தான்! அதே சின்னப்பையன் தாவீது, கர்த்தரின் மந்தையான இஸ்ரவேலுக்கு நிகழ்ந்த சோகத்தில் 'அரக்கன் கோலியாத்தை' எதிர்கொண்டு, அவனைக் கொன்று கிருபையை அனுபவித்தான்! வாலிபனாகியபோது 'சவுலின் கொலைவெறியை' எதிர்கொண்டு, அதை ஜெயித்து கிருபையை அனுபவித்தான்! மா அரசனாய் இருந்தபோது, படையெடுத்துவந்த 'எதிரி தேசங்களை' வென்று கிருபையை அனுபவித்தான்! தாவீதின் சந்ததியில் வந்த 'இயேசு' மரணத்தையும் வென்று, தெய்வ கிருபைக்கு புகழ் சேர்த்தார்! அந்த 'நிச்சயமான கிருபையை' நமக்கும் தருவதாக கூறும் அப்.13:34ம் வசனம் மாபெரும் நற்செய்தி அல்லவோ!

_tr

பெட்டகம் 23 | ஜூன் 2020 | பரல்கள் 06




## துன்பத்தையல்ல 'தெய்வ அன்பின் பாதுகாப்பை' நோக்குவோமாக!

எஸ்தர் புத்தகத்திலுள்ள மிக உண்மையுள்ள சாதாரண யூதன் மொர்தெகாயுவிற்கு நடந்த சம்பவத்தை சற்று எண்ணிப் பாருங்கள்! **அவனுடைய இழிவான சாவிற்குத்** தூக்கு மேடையை அரசு அதிகாரி ஆமான் அன்று இரவு தயார் செய்து கொண்டிருக்கிறான்! மறுபுறத்திலோ, **அவனை எவ்விதம் தேசத்தில் கனமடையச் செய்வது** என, தேவன் தன் மிகுந்த அன்பில் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறார்!! மொர்தெகாயோ, எதுவுமே அறியாமல் இளைப்பாறி தூங்கிக் கொண்டிருந்தான். ஒருவேளை, அந்த ராத்திரியில் அவனை எழுப்பி "தூக்கு மேடையை மாத்திரம்" காண்பித்திருந்தால் அவன் எவ்வளவு கதிகலங்கிப் போயிருப்பான் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இன்றும் அப்படித்தான், அநேக கிறிஸ்தவர்கள் 'துன்பங்களை மாத்திரம்' காண்கிறார்களே அல்லாமல், "தெய்வ அன்பின் பாதுகாப்பையோ" காணத் தவறுகிறார்கள்! இவர்களின் கண்கள் "மொர்தெகாயின் நன்மைக்குச் செயல் பட்ட" தெய்வ அன்பைக் கண்டிருந்தால், துன்பமென்னும் மலையை நிமிர்ந்த தோளோடு எதிர்த்து நின்றிருப்பார்களே! அந்த மலை, சமுத்திரத்தின் நடுவில் கவிழ்ந்துவிழும் அற்புத ஜெயத்தையும் கண்டிருப்பார்களே!! *-Ed*


**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா**

அநேகர் சந்தாவை புதுப்பித்ததற்கு நன்றி! புதுப்பிக்காதவர்கள் **மார்ச் 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!


**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**


வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP**, Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## அகந்தையின் வழி அழிவு! தாழ்மையின் வழி ஜீவன்!

தாழ்மையாய் இருப்பதில், மதியீனமான எண்ணம் கொண்டிருக்கும் அநேகர் இருக்கிறார்கள். அதென்னவெனில் "தோள் மடிந்து......கோழையாய்" இருப்பதை தாழ்மை என எண்ணுகிறார்கள். இதுபோன்றவர்கள், தங்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும், தங்கள் ஜீவியத்திலிருந்து ஏதாகிலும் நன்மை பிறக்குமோ? என தங்களைக் குறித்து "நம்பிக்கையற்ற எண்ணம்" கொண்டவர்களாயும் இருப்பார்கள். இவ்வாறாக, "**தாழ்வு மனப்பான்மையை, தாழ்மை!**" என எண்ணி வஞ்சிக்கப் படாதீர்கள்! உங்கள் சமுதாய தாழ்வை, தாழ்மை என சொல்லி விடக்கூடாது? அதுபோலவே, இவ்வுலகின் எல்லா மனிதர் களுக்கும் நம்பிக்கை இருப்பதைப் போலவே, ஓர் கொடிய இழிவான பாவிக்கும் நம்பிக்கை நிச்சயமாய் இருக்கிறது. எனவே கடந்த காலத்தில் நீங்கள் எப்படி இருந்தீர்கள்? உங்களின் சமுதாய ஏற்றத்தாழ்வு என்ன? என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல..... உங்கள் உள்ளான மனதில், நீங்கள் எவ்வளவு தாழ்மையாய் இருக்கிறீர்கள் என்பதும், எவ்வளவு தாழ்மையாய் மாறப் போகிறீர்கள் என்பதும் ஆகிய **இருதய தாழ்மையின் வழி மாத்திரமே** உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை நிர்ணயிக்கக் கூடியதாய் இருக்கிறது!

இவ்விஷயத்தில் தேவன் அப்பழுக்கற்ற நீதியுடன் செயல் படுகிறார்! ஆம், ஒரு துளியேனும் "பாரபட்சத்தை" அவரிடம் காணவே முடியாது! நீங்கள் இப்போதுதான் இரட்சிக்கப்பட்ட புதிய சகோதரனாகவோ அல்லது நீங்கள் ஒரு "மூத்த சகோதர னாய்" இருப்பதாலோ அவருக்கு பொருட்டல்ல! அவருடைய பிரமாணத்திற்கு முன்பாக எல்லோரும் சமமானவர்களே!

**பெருமை கொண்டவன்** தன்னுடைய கண்களுக்கு ஞானியாகவோ அல்லது தன்னைக் குறித்த மேட்டிமை சிந்தை கொண்டவனாகவோ இருந்துகொண்டு, பிறரை நியாயம் தீர்த்து, குறைகளும் குற்றங்களும் கூறத்துவங்கினால்..... இதை விட மோசமானது வேறெதுவுமே இல்லையெனலாம்! ஆம்,

*இந்நிலையில் இருக்கும் ஒருவன் இருளின் ஆழத்திற்குள் சென்று விட்டான் என்றே கூறவேண்டும்! பெருமையின் விளைவினால் இவ்வித இருளுக்குள் வந்து விட்டவன், இரட்சிப்பைப் பற்றியோ தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றியோ ஏதும் விளங்கிக் கொள்ள முடியாத நிலைக்குச் சென்று விடுவான்!*

*மேலும், "நான் பிறரை குறை கூறியது நியாயமான செயலே!" என எண்ணும் அகந்தையான நிலைக்கு வந்த ஒருவனிடம், தேவன் தன் பிரமாணத்தின்படி கண்டிப்பாய் குறுக்கிட்டு அவனை தாழ்த்துவார்! இரட்சிப்பின் ஆழமான பொருள், நம்முடைய உள்ளான மனிதனில் நாளுக்கு நாள் நாம் அடையும் கிறிஸ்துவின் சாயலில் "மறுரூப மடையும்" செயலேயாகும்.*

**நீங்கள் பற்பல ஊழியங்கள் செய்தாலும்..... அதையும் 'வல்லமையாய்' செய்தாலும், நீங்கள் பெற்றுக்கொள்ளும் 'தேவ சாயலுக்கு' அவைகள் ஒப்பானது அல்ல, மாற்றும் அல்ல! தாழ்மை அள்ளித்தரும் இரட்சிப்பு "உள்ளான ஜீவியத்திற்குரியது". ஆம், மறுரூபமடையும் மகிமையின் வாழ்வு!!**

*தேவன் காயப்படுத்துகிறார்! காயம் கட்டுகிறார்!!..... அது போலவே, தேவன் உயர்த்துகிறார்! தாழ்த்துகிறார்!! இந்த உண்மையை எத்தனை தெளிவாய் தேவன் தன் புத்தகத்தில் எழுதி வைத்துள்ளார். அவர் நம்மீது கொண்டிருக்கும் விருப்பமெல்லாம், நம்மை இரட்சிப்ப தேயாகும். ஏதோ, நம்மீது பாசமாயிருப்பதுபோல் உணர்ந்தபடியால், திடீரென்று "கிருபையை" அள்ளி வழங்கிட மாட்டார். அவ்வா றெல்லாம் நாம் எண்ணிக்கொள்வது சுத்த மதியீனமேயாகும்.*

*இவ்வுலகில் மனிதர்கள் எதை எதையோ கண்டுபிடித்திட வாஞ்சிக்கிறான்! எத்தனையோ சிந்தைகளைத் தனக்குள் சிந்திக்கி றான்!! இன்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், "தேவன் தன் பிரமாணங்களின்படியே தன் இரட்சிப்பை செயல்படுத்துகிறார்" என்ற இந்த சிந்தையை* **ஓர் மாபெரும் கண்டுபிடிப்பாக** *இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். அவ்வாறு பற்றிக் கொண்டால், நீங்கள் ஒருபோதும் வழிதவறிச் சென்றிடவே மாட்டீர்கள்.*

**எவ்வளவு அதிகம் உங்களைத் தாழ்த்துகிறீர்களோ அவ்வளவாய் அதிக இரட்சிப்பை, அதாவது..... அதிக வெளிச்சத்தை..... அதிக வல்லமையை..... இவ்வாறு, தேவனுடைய 'எல்லா' அதிகத்தையும் பெற்றுவிடுவீர்கள்!**

*தேவனை "அதிகம் வேண்டும்" என வாஞ்சிக்கும் அனைவரும் இப்பொன்னான பிரமாணங்களைத் தழுவிக்கொள்வார்களாக!!*

*"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என யாக்கோபு 4:7-ம் வசனம் விருதாவாகவா கூறுகிறது? பிசாசை நான் 'எதற்காக' எதிர்த்து நிற்க வேண்டும்? உங்களுக்கு இப்போது 'விடை' தெரிந்துவிட்டது என்றே கருதுகிறேன். ஏனென்றால், அவன்தான் நம்முடைய காதுகளில் 'கிசுகிசுத்து' நம்மைக் குறித்த மேட்டிமையான எண்ணங்கொள் வதற்குத் தூண்டுகிறான்! "ஆகவேதான்" நாம் அவனை எதிர்த்து நிற்க வேண்டும்.*

*நீங்கள் ஏற்கனவே அவனை உங்கள் வாழ்வில் 'மேட்டிமையின்' தலைவனாக ஏற்றுக்கொண்டிருந்தால், இன்று அவனை, உங்கள் சிம்மாசனத்திலிருந்து தூக்கி எறியுங்கள்! பிசாசின் குரலுக்கு செவிகொடுத்து, 'பெருமை' என்னும் கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் ஏராளம், ஏராளம்!! சாத்தானின் பிரதான ஆயுதமே "ஒருவனைப் பெருமையினால் உப்ப வைப்பது தான்!" நீங்கள் என்னத்தை மறந்தாலும், இதை நீங்கள் மறவாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள்!*

**நீதியை மெச்சிக்கொள்ளாத கிறிஸ்தவர்கள் யாருமே இல்லை எனலாம். ஆம், தேவன் அப்பழுக்கற்ற நீதியுள்ளவர். அவர் செய்வது அத்தனையும் சரியாகத்தான் இருக்கும்! அவர் பிழையற்றவர்! பிறர் உங்களைச் சரியாக நடத்தாமல், உங்களுக்குரிய பொதுவான அளவின்படியான மரியாதையை கூட காட்டாமல் இருந்தால் அதினால் என்ன? அவை யாவும் தேவனை சிறிதளவும் பாதிப்பதேயில்லை! அவர் தொடர்ச்சியாக உங்களுக்குத் தரவேண்டிய கிருபையைக் கொடுத்துக் கொண்டே இருப்பார்!**

*"இந்த உண்மை" நம்மில் சதா - நிறைந்த மகிழ்வைத் தருகின்ற தல்லவா? வாழ்வின் எல்லாவற்றிற்கும் உரிய திறவுகோலை* **தாழ்மை யென்னும் விதி** *பெற்றிருப்பது எவ்வளவு மகிமையானது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.*

*நாம் யாவரும் ஓர் ஓட்டப்பந்தயத்தில் பங்குபெற்று ஓட வேண்டும் என வேதம் கூறுகிறது. நாமோ தாழ்மையென்னும் இந்த பந்தய சாலையில் கருத்தாய் ஓடிடக்கடவோம்! தாழ்மையுள்ளவர் களிடம் ஞானம் இருக்கிறது என வாசிக்கிறோம். இதற்கு மாறாக, நம்மைக் குறித்து எந்த ரூபத்தில் மேட்டிமையான எண்ணங்களைக் கொண்டிருந்தாலும், அது மதியீனத்தின் உச்ச கட்டமும்..... பைத்தியம் கொண்டது போலவும் ஆகும்!! ஆம், பெருமை கொண்டவனின் செயல் 'பைத்திய' செயலாகவே தோன்றும்! காரியம் இவ்வாறாய் இருக்க, நீங்கள் எத்தகைய வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? தீர்மானம் உங்கள் கரத்தில் இருக்கிறது..... தாழ்மைக்கு*

*கைகொடுக்கும் உங்கள் தீர்மானமே "ஜீவ பிரமாணம்". ஆகவே பெருமையின் பிரமாணத்திற்கு சற்றும் கைகொடாமல், தாழ்மை பிரமாணத்தை மனதார போற்றி, சொந்தமாக்கி வாழுங்கள்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## 'புறக்கணிக்கப்படுவது' சீஷனுக்கு கிடைத்த பாக்கியம்!

**நா**ம் *'ஒருவருக்கொருவராய் இருக்கும்பொருட்டே' தேவன் நம்மை சிருஷ்டித்திருக்கிறார். மனிதர்களோடு சிநேக உறவில் இருப்பது முற்றிலும் இயற்கையானதேயாகும்.* **அவபக்தியான இந்த உலகில்,** *நாம் தேவனோடு இசைந்து நடந்துவரும்போது, 'நல்ல கிறிஸ்தவர்கள்' என கூறிக் கொள்வோர்கள் கூட, ஒதுங்கிச் செல்லும் நிலை ஏற்படும்! இப்படியொரு* **விலைக்கிரயத்தை** *உங்களால் சகித்துக் கொள்ளக்கூடுமா? தேவனே நமக்குத் தந்த ஆள்த்துவ உணர்வுகள், பிறரோடு கொண்ட 'தோழமைக்காகவே' வாஞ்சிக்கிறது! என்னுடைய வாஞ்சையை யார் புரிந்துகொள்ள முடியும்?அதே சமயம், சத்தியத்தின் மீது நான் கொண்ட சொல்லொண்ணா நேசத்தை விளங்கிக் கொள்ளும் நபர்கள் தான் உண்டோ? இவ்விதமான கேள்விகள், இயேசுவின் உண்மை சீஷனுக்கு நிச்சயமாக எழும்பும்:*

> **நம் ஆவிக்குரிய உள்ளான அனுபவத்தைப் புரிந்து, அதில் பங்கேற்கும் நண்பர்கள் வெகு சிலரே இருக்கிறபடியால், அந்த சீஷனின் நடை தனிமைப்படுகிறது!**

*நம் ஆண்டவரும் இவ்விதமாகவே பாடுபட்டார்! மெய்யாகவே தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் அனுபவத்தைப் பெற்ற உண்மை சீஷன், தன்னை அநேகர் புரிந்து கொள்ளவில்லை என்ற கதிக்கு ஆளாவான். இந்த சீஷனுக்கு சமூகத்தோடு சேர்ந்து நிற்கும் ஐக்கியம் அவ்வப்போது இருந்தாலும், சபையின் ஊழியத்தில் பங்கு பெற்ற சுறுசுறுப்புகள் இருந்தாலும் "ஓர் உண்மையான ஆவிக்குரிய ஐக்கியத்தை" கண்டடைவது, ஓர் கடின செயலாகவே அவனுக்கு இருப்பதைக் காண்பான். இந்த நிலை தனக்கு ஏற்பட்டது என்பதற்காக, வேறு விதமாய் சிந்தித்திட அந்த சீஷன் எத்தனிக்கக் கூடாது. ஏனெனில்,* **சீஷராய் வாழும் யாவருமே 'அந்நியரும் பரதேசியுமாகவே'** *இந்த உலக பயணத்தை பயணித்திட அழைக்கப்பட்டவர்கள். இந்தப் பயணம், தன் காலினால் நடந்துவரும் பயணமல்ல..... அது, இருதயத்திற்குள் நடந்து வரும் பயணமேயாகும். ஆம், அவன் தனது சொந்த ஆத்துமாவின் தோட்டத்திலேயே தேவனோடு பயணிக் கிறான்! அங்கு தேவனைத் தவிர வேறு யார் பயணித்திட முடியும்?*

*கர்த்தருடைய ஆலயத்தில் கூடிவரும் திரளான ஜனங்களை விட, இவன் பெற்ற ஆவியின் உணர்வோ, முற்றிலும் வேறுபாடு கொண்டதே யாகும். அந்த திரள் ஜனங்கள் கர்த்தருடைய வழியை கேட்டிருக்கி றார்கள். ஆனால் இவனோ 'அதை' கண்டிருக்கிறான்! அன்று சகரியா கர்த்தருடைய பலிபீடத்திலிருந்து திரும்பி வந்தபோது, ஜனங்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டு "இவன் ஒரு தரிசனத்தைக் கண்டான்!" என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதைப் போலவே இவனுடைய நடையுமிருக்கும் (லூக்கா 1:22).*

**ஒரு உண்மையான ஆவிக்குரிய மனிதன், சீஷனாகவும்! பிறருக்கு வினோதனாகவும்! இருப்பான். அவன் தனக்காக வாழ்ந்து விடாமல், பிறரும் தன் போன்று சீஷத்துவ வாழ்க்கை வாழ வாஞ்சை கொண்டி ருப்பான். அவன் ஜனங்களைக் கண்டு "உங்கள் முழுமையும் கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்" என கேட்பானேயல்லாமல், தனக்கென சிறிது பங்கு கூட கேட்டிட மாட்டான்!**

*மனுஷர்களுக்கு முன்பாக தன் இரட்சகர் மகிமைப்பட தவித்திருப்பான் அல்லாமல், தான் கனம் பெறுவதை ஒருபோதும் விரும்பமாட்டான். தன் கர்த்தர் உயர்த்தப்பட்டு, தான் புறக்கணிக்கப் பட்டால், அதில் மகிழ்ச்சி காண்பான்! இவனது மேன்மையான உயர்ந்த ஆர்வத்தில் பங்குகொண்டு பேசிக்கொள்ள, வெகுசிலரையே இவன் காண்கிறபடியால், இந்த இரைச்சலான மார்க்க சப்தங்களுக்கு இடையில் 'மௌனமாகவே' இவன் காணப்படுவான். இதனிமித்தம், கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் இவனுக்கும் இடையிலான தூரம் பெரிதாகிக் கொண்டே வருமேயல்லாமல்...... நெருங்கி வருவதில்லை! "யாருடைய வஸ்திரத்தில், கர்த்தர் மகிழும் வெள்ளைப்போளம், சந்தனம், லவங்கம் ஆகிய இவைகளின் வாசனை வீசுகிறது?" என்றே இவன் தனக்கு நண்பர்களைத் தேடுவான் (சங்.45:8). அந்த வாசனை கொண்ட ஒரு சிலரைக் கண்டு மகிழுவான்.... அந்த சுகந்தம், ஒருவரிடமும் இல்லையென்றால், இயேசுவின் தாயாகிய மரியாளை போன்று, காரியத்தை தன் இருதயத்தில் வைத்துக்கொள்வான்!*

*இப்படியெல்லாம் தனிமைப்படும் அந்த சீஷன் "தகப்பனும் தாயும் என்னை கைவிட்டாலும் கர்த்தர் என்னை சேர்த்து அணைப்பார்" என்று கூறிய சங்கீதக்காரனைப் போல, தன்னையே முற்றிலும் தேவனுடைய மார்பில் சாய்ந்து விடுவான். ஒரு கூட்டத்தில் கற்றுக்கொள்ள முடியாதவைகளை, கர்த்தரோடு கொண்ட தனிமையில் கற்றுக்கொள்வான்! அவரே அவனுக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருப்பார்!(1கொரி.1:30). இவ்வாறு கிறிஸ்துவே*

அவனுக்கு எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருப்பார்!

**இப்படியெல்லாம், ஒரு சீஷனுக்கு ஏற்படும் விளைவை கூறும்பொழுது, அவனுக்குரிய இரண்டு விஷயங்களை சொல்லாமல் இருக்க முடியாது! ஒன்று: இங்கு நாம் காணும் தனித்து விடப்பட்ட இந்த சீஷன் 'ஒரு அகங்காரமான' பெருமையுள்ள மனிதன் அல்ல! 'உன்னை விட நான் பரிசுத்தவான்' என மார் தட்டும் இழிநிலை தூயவானும் அல்ல!**

எல்லா மனிதரிலும் நான் சிறியவன் என்ற உணர்வில் அவன் மகிழ்ந்திருப்பான்! "நீ தனிமையானவன்!" என்ற குற்றச்சாட்டையும், மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்வான். உண்மையில், தன் உணர்வுகளை ஏகசிந்தையுள்ளவர்களோடு, தன்னை பகிர்ந்து கொள்ளவே விரும்புகிறான்.... ஆனால், அவனைச் சுற்றியுள்ள கிறிஸ்தவ கூட்டம், அவன் கூற்றை மறுப்பதால் அவன் மௌனமாகி..... தன்னுடைய மன வேதனைகளை தேவனிடம் மாத்திரமே கூறுவான்!

இவனைக் குறித்து இரண்டாவது காரியம் யாதெனில்: இவன் யாரோடும் பழக மறுக்கும் சீஷன் அல்ல! மனுவர்க்கத்தின் பாடுகளுக்கு தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டு, பாராமுகமாய் பரலோகத்தை அண்ணார்ந்து பார்ப்பவனும் அல்ல! இதற்கு நேர்மாறாக, தேவனோடு தனிமைப்படுத்தப்பட்ட இந்த சீஷன், மிகுந்த இரக்கம் உள்ளவனும், பாவத்தால் காயப்பட்டவர்களைத் தேற்றி ஆற்றுபவனுமாயிருப்பான். அவனுடைய ஜெப வேளையில் "ஒரு ஏழை விதவையின் பசியை உணர்ந்தால்" ஜெபத்தை நிறுத்தி, அந்த ஏழைக்கு உதவிய பிறகு, தன் ஜெபத்தை மீண்டும் தொடர்ந்திடுவான்!!

முடிவாய் கேளுங்கள்: இன்றைய கிறிஸ்தவர்கள் பெரும்பாலோர் அழிவிற்குரிய இந்த உலகத்தையே, தங்கள் வாசஸ்தலமாக்கிக் கொண்டார்கள்! **குணப்படாத தங்கள் சமுதாயத்தோடு சமரசமாய் 'சமாளித்து கொண்டு' ஜீவிப்பதால்** இந்த பூமியில் பரதேசியாய் வாழும் குணாதிசயத்தை இழந்துவிட்டார்கள்! இவர்கள் இருக்கும் அந்த நிலையில், இந்த உலகம் அவர்களை மனதார தழுவிக்கொள்கிறது. இந்த கதிக்கு வந்ததுதான் இவர்களுக்கு ஏற்பட்ட சோகம்! இவர்கள் தனிமைப்படுத்தப்படவில்லை..... ஆனால், இவர்கள் சீஷர்களும் அல்ல! இனி, மீதியாயிருக்கும் நீங்கள் 'தைரியம்' கொள்ளுங்கள்! செம்மையான இருதயம் கொண்டவர்கள் குறைந்தது 'ஒருவனாவது உண்டோ!' என்றே, தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவித் தேடுகிறது! அப்படி 'புறக்கணிக்கப்பட ஒருவனாய்' அல்லது இந்த பூமியில் 'பரதேசியாய்' வாழ்ந்திட நீங்கள் ஏன் துணிவுகொள்ளக்

*கூடாது! நற்செய்தி என்னவெனில் "அந்த ஒருவனுக்கே" அவர் தம் வல்லமையைத் தந்து ஆதரிக்கிறார்!*

*– A.W. டோசர்*

## மனுஷீக பாசப்பிணைப்பு ஆபத்தானது என காண்பித்த கர்த்தர்!

*டோனான் ஊரில் இன்னமும் என் மகளுக்கு ஏற்ற தங்குமிடம் அமையவில்லை. அவளுக்கு ஏற்ற இடமில்லாத அந்த இடத்தில் அவளைவிட்டு வருவது ஆபிரகாம் 'ஈசாக்கை பலி கொடுத்த' செயல் போலவே உணர்ந்தேன். இச்சமயத்தில் தந்தை லா- கோம்பே என்னை உற்சாகப்படுத்தி* "**பலிபீடம் தான் அவள் பங்கு என்றால், அங்கே உன் மகளை விட்டு வருவதும் நல்ல பாடம்தான்**" *என கூறினார். ஆனால் 'கத்தோலிக்க முறைமை கல்விக்காக' அங்கு வந்திருந்த பெண் பிள்ளைகள் நல்ல பழக்க வழக்கங்களை உடையவர்களாய் இல்லை. அதுமாத்திரமல்லாமல், பிரஞ்ச் மொழி கற்றவர்களுக்கு, டோனான் மொழிப்பழக்கம் கடினமாயிருந்தது! உணவு பழக்கமும் அவள் விரும்பி புசிப்பதாயில்லை. என் மகளை என்னோடு அழைத்து வந்தது 'நானே என் மகளுக்கு கேடு தேடி வைத்தேனோ' என்ற உணர்வு என்னை வருத்தத்தில் ஆழத்தியது.*

*ஒரு தாயின் உள்ளத்திலிருக்கும் எல்லா பாசமும் எனக்குள் பொங்கி வந்தது! அதுபோன்ற ஒரு துக்கநிலை "ஆகார், தன் குழந்தை இஸ்மவேல் பிள்ளையை அந்த வனாந்திரத்தில் சாகும்படி விட்டு வந்த" நிலைக்கு ஒப்பாக என்னைக் கண்டேன். எவ்வித கொடிய நிலைக்கும் என்னை ஒப்புவிக்க நான் ஆயத்தமாய் வாழ்ந்தபோதிலும், அந்த நிலை 'என் மகளுக்கும்' வராதிருக்க முயற்சி எடுத்திருக்கலாமோ? என என் உள்ளம் தவித்தேன். நான் கர்த்தருடைய கரத்தில் பத்திரமா யிருந்தாலும், என் மகளோ இருளான சூழ்நிலையில் இருந்ததைப் போல் கண்டேன்!*

*இவள் பிரான்ஸ் தேசத்தின் என் இளவரச மாளிகையில் இருந்திருந்தால் சிறந்த தரமுடைய உணவிலும், அதிநுட்ப கல்வியிலும் வளர்ந்திருக்க முடியுமே.... என்ற எண்ணமும் என்னைத் தாக்கியது. ஆனால் இங்குள்ள சூழ்நிலையோ அவை யாதொன்றிற்கும் சாத்தியமற்றதாகவே தோன்றியது. டோனான் ஊர், அவ்வளவு பின் தங்கிய ஊராயிருந்தது. அங்குள்ள எந்த உணவு பதார்த்தமும் அவளுக்கு ஏற்புடையதாயில்லை. புசிக்க முடியாத உணவுகளை 'கண்டிப்பாய் புசிக்க வேண்டும்' என நான் வலியுறுத்திக் கூறியது அவள் மனதிற்கு சஞ்சலம் ஏற்படுத்தியது. "எங்கே நான், ஆபிரகாமைப்*

*போல் கத்தியை எடுத்து, அவளை கிடத்தி, கொல்லப் போகிறேனோ?” என்றெல்லாம் என் எண்ணம் அலைமோதி தாக்கியது. மரித்துவிட்ட என்னுடைய மாமியார்கூட, என்னுடைய செயலை ஏற்றுகொள்ள முடியாமல் ஆத்திரமடைந்திருப்பார்கள் என்ற எண்ணமும் எனக்குள் வந்தது. என் மகளிடம் காணப்பட்ட தெய்வீக நற்பண்புகளுக்கு நஷ்டம் ஏற்படும் கால நிலையை கண்டு வருந்தினேன்!*

*முடிவாக, தத்தளிக்கும் என் மனதின் நடுவில் தெய்வீக பாடம் ஒன்றை தேவன் கற்று தந்தார். இந்த சூழ்நிலை அனைத்தையும்* **தேவனே கட்டளையிட்டு அனுமதித்தார்** *என்பதை உணர்ந்து, கொந்தளிக்கும் ஆத்துமா எனக்குள் அமர்ந்தது!*

**மனுஷீகமான பாசபிணைப்பை நான் என் மகள் மீது வைத்திருந்ததை தேவன் காட்டினார்! மனுஷீக பாசம் தேவனுடைய வழியை விட்டு விலக்கும் மகா கொடியது எனவும் பாடம் புகட்டினார்!**

*அதிலிருந்து இன்னும் ஒருபடி அதிகமாய் விடுதலை அனுபவிக்க என்னை முற்றிலும் ஒப்புவித்தேன்! இதன் பின்பு நடந்தது என்ன தெரியுமா? என் மகள் விரும்பி புசிக்கும் பிரான்ஸ் தேசத்து உணவு சமைக்கப்பட்டு, அவளுக்கு வழங்கினார்கள். என் மகள் அதிக மகிழ்ச்சி கொண்டாள். நானும் என் புனித வழிக்கு திரும்பினேன்! தேவன் கற்றுக்கொடுத்த பாடத்திற்கு தாழ்பணிந்து நன்றி கூறினேன்!*

*– மேடம் குயான்*

---

## 14–பேரை உயிர்த்தெழச் செய்த “தாழ்மை ஊழியர்!”

தேவமனிதர் *விக்கிள்ஸ்வொர்த் 8-வயதிலேயே கர்த்தரின் இரட்சிப்பின் பாத்திரமாகி விட்டபடியால், இளம் பருவத்திலிருந்தே ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் பணியில் ஈடுபட்டுவிட்டார்.*

*ஒரு தடவை தன்னுடைய ஒரு கூட்டத்தில், ஒரு தள்ளு வண்டியில் வந்து கலந்துகொண்ட ஒரு நடக்க முடியாத அம்மாவைப் பார்த்து “உங்களுடைய மூட்டுகளில் ஏன் கம்பளித் துணிகளைச் சுற்றியிருக் கின்றீர்கள்?” என்று தேவ மனிதர் கேட்டார்.*

*“எனது மூட்டுகளை சூடாக வைத்துக்கொள்வதற்காகத்தான்” என்று அந்த அம்மா பதில் கொடுத்தார்கள். அந்தக் கம்பளி துணிகளை அநேக ஊக்குகளால் (Safety Pins) குத்தி, அவர்கள் ஒருங்கிணைத் திருந்தார்கள்.*

*“அந்த ஊக்குகளை எல்லாம் அப்புறப்படுத்துங்கள். இரும்புக் கடைக்காரர் கடையில் கூட இத்தனை ஊக்குகள் விற்பனைக்கு*

இருக்காது" என்று தேவ மனிதர் நகைச்சுவையுடன் கூறி அவைகளையும், கம்பளித் துணிகளையும் எடுக்கச் சொல்லிவிட்டு "உங்களுடைய தள்ளு வண்டியிலிருந்து வெளியே வாருங்கள்" என்று கூறினார்!

"என்னால் அது முடியவில்லையே" என்று அந்த அம்மாள் சொன்னார்கள்.

"உங்களுக்கு அது முடியுமா அல்லது முடியாதா என்று நான் உங்களிடம் கேட்கவில்லை. தள்ளுவண்டியிலிருந்து வெளியே வரத்தான் நான் உங்களிடம் கூறுகின்றேன்" என்று விக்கிள்ஸ்வொர்த் கூறினார். இப்பொழுது அந்த அம்மாள் எழுந்து நின்றார்கள்.

"இனி நடவுங்கள்!" என்று சொன்னார்.

"எனக்கு நடக்க இயலாதே" என்று அந்த அம்மாள் கூறினார்கள்.

"நடக்க முடியுமா, முடியாதா என்பதை நீங்கள் பரிசோதித்துப் பார்க்க நான் உங்களிடம் சொல்லவில்லை. எனது வார்த்தைப்படி உங்கள் காலடிகளை எடுத்துவைத்து நடவுங்கள்" என்றார் ஆணித்தரமாக!

"என்னால் அது கூடாது" என்று திரும்பவும் அவர்கள் கூறவே, தேவ மனிதர் அந்த அம்மாவுக்குப் பின்னால் வந்து, அவர்களைச் சற்று முன்பாக தள்ளிவிட்டார். என்ன ஆச்சரியம், எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள்!!

விக்கிள்ஸ்வொர்த் எதை எல்லாம் செய்தாரோ அவைகளை எல்லாம் தனது அருமை இரட்சகர் இயேசுவின் மேல் அன்பு பொங்கி செய்தார். மக்களின் ஆரவார புகழ்ச்சி அல்லது ஏதாவது பிரதிபலன் எதிர்நோக்கி அவர் அவைகளை ஒருக்காலும் செய்யவில்லை. சிறு குழந்தைகளிடம் அவருக்கு மாபெரும் அன்பு இருந்தது. தான் செல்லும் இடங்களில் குழந்தைகளை ஒன்று கூட்டி அவர்களுக்கு இயேசு இரட்சகரைக் குறித்துப் பேசுவார்!

"என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" (மத்.4:19) என்று ஆண்டவர் சொன்ன வார்த்தைகளே, ஆத்தும ஆதாய வெற்றிக்கான அடிப்படை அஸ்தி பாரம் என்று விக்கிள்ஸ்வொர்த் கூறுவார். **"என் பின்னே வாருங்கள்" என்ற வார்த்தையின் பொருள் "பரிசுத்தத்தில் கர்த்தராகிய என்னைப் போலா குங்கள்** (Be like me in holiness)" என்பதாகும். "நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போலாகிவிட்டால், நம்மைப் பார்ப்போர் எளிதாக அவரிடம் வந்து விடுவார்கள்" என்று அவர் சொல்லுவார். அதுபோலவே, வாழ்ந்தும் பிரகாசித்தார்!

"உலக கவர்ச்சி, ஆண்டவர் பேரிலுள்ள எனது அன்பை குளிர்ச்சியடையப் பண்ணி அனல் குன்றச் செய்துவிடும்!" என்ற பக்தன் ஜாண் வெஸ்லியின் வார்த்தைகளை அடிக்கடி கூறி அப்படியே ஏற்று நடந்தார்!

விக்கிள்ஸ்வொர்த் எந்த ஒரு பள்ளிக்கும் சென்று முறையாக கல்வி பயின்றவர் அல்ல. வீட்டின் வறுமை காரணமாக, அவர் தனது பிஞ்சு வயதான 6-ம் வயதிலேயே தாயாருடன் மற்றவர்களுடைய வயல்களில் முள்ளங்கி தோண்டச் சென்றார். அவர் தனது 26-ம் வயதில், தனது மனைவி மூலமாக எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டார்!

1913 -ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி புது வருட பிறப்பு அன்று விக்கிள்ஸ்வொர்த்தின் அருமை மனைவி மேரி ஜேன் தேவ ஊழியம் காரணமாக வெளி ஊர் சென்றிருந்தார்கள். அவர் தனது மனைவியை "பாலி" என்றே அன்புடன் அழைப்பார். அந்த தேவ ஊழியப் பாதையில் அம்மையார் சற்றும் எதிர்பாராத விதமாக திடீரென்று மரித்துப் போனார்கள்.

அவருடைய உத்தரவின்படி, அம்மையாரின் ஜீவனற்ற சடலம் அவர்களது அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே அவர்களது படுக்கையில் கிடத்தி வைக்கப்பட்டது. அவர்களின் சரீரத்தை சுமந்து வந்தவர்கள் கடந்து சென்றதும், விக்கிள்ஸ்வொர்த் தனியாளாக அம்மையாரின் அறைக்குச் சென்று, தனக்குப் பின்னாக அறையை மூடிவிட்டு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மரணத்தை கடிந்து கொண்டு தனது மனைவியைவிட்டு அது கடந்து செல்லக் கட்டளையிட்டதும், அம்மையார் தனது கண்களைத் திறந்து முதற்பார்வையாக தனது கணவனையே பார்த்து.....

"இதை ஏன் செய்தீர்கள் ஸ்மித்?" என்று கேட்டார்கள்.

"என் அன்பே பாலி, நீ எனக்குத் தேவை" என்றார் விக்கிள்ஸ்வொர்த்.

"ஸ்மித், எனது தேவப் பணி நிறைவு பெற்றுவிட்டது. தேவன் என்னை அழைக்கிறார்" என்று அம்மையார் கூறினார்கள். அவர்கள் இருவரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்கப்பால் தேவ மனிதர் தன் மனைவியைப் பார்த்து "நல்லது பாலி, நான் உங்களைப் போக அனுமதிக்கிறேன்" என்று சொன்னார். பின்னர் மேரி ஜேன் அம்மையார் தனது தலையை தலையணையில் வைத்துப் படுத்து தனது ஆண்டவரண்டை கடந்து சென்றார்கள்!!

விக்கிள்ஸ்வொர்த் 14-தடவைகள் மரித்தோரை உயிரோடு எழுப்பியிருக்கின்றார். ஒரு தடவை விக்கிள்ஸ்வொர்த் 5-வயதான ஒரு

சிறுவனுடைய மரண வீட்டிற்குச் சென்றிருந்தார். மரணமானது ஒரு சிசுவின் மேல் செலுத்தியிருந்த ஆதிக்கத்தின் கொடுமையை அவர் கண்டு, ஆவிக்குள் கலங்கினார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது!

சற்று நேரம் சென்ற பின்னர், அந்தக் குழந்தையைச் சுற்றிலும் அமர்ந்து அழுது கொண்டிருந்த யாவரையும், ஏன் அதின் தந்தை யையும் கூட அறையை விட்டு வெளியே போகச் செய்து கதவைத் தாழ்பாழிட்டு உள்ளே இருந்து கொண்டார். மரித்துப்போன அந்தப் பாலகனை பிரேதப் பெட்டியிலிருந்து வெளியே தூக்கி எடுத்து, அறையின் ஒரு மூலையில் அந்தச் சடலத்தை நிற்கும் விதத்தில் தலையணைகள், துணிகள் போன்றவற்றை பயன்படுத்தி வைத்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் மரணத்தைக் கடிந்து கொண்டு, அது பறித்துக் கொண்ட அந்த சின்னஞ் சிறு பாலகனின் உயிரை திருப்பிக்கொடுக்குமாறு கட்டளையிட்ட போது, **சிறுவன் உயிர் பெற்றான்!** அவனை அவனுடைய துயரம் நிறைந்த பெற்றோர்களிடம் ஜீவனுள்ளவனாக மகிழ்ச்சியோடு அவர் ஒப்புவித்துச் சென்றார்.

விக்கிள்ஸ்வொர்த் தமது தேவ செய்திகளை கேட்க வரும் மக்களிடம் அவ்வப்போது சொல்லும் வார்த்தை "இரண்டு காரியங்கள், உங்களை தேவனுடைய மாபெரும் வாக்குதத்தங்களை நீங்கள் சுதந்தரிக்க உங்களை வழிநடத்தும். ஒன்று, **உங்களுடைய பரிசுத்தம்.** அடுத்தது தேவன்பேரிலுள்ள **உங்களது உறுதியான விசுவாசம்**" என்று அவர் கூறுவார். மேலும், "பின்னிட்டுத் திரும்பிப் பார்க்கும் மனிதன்! தனது எண்ணங்களில் இரண்டு நினைவுகளால் குந்தி குந்தி நடக்கும் மனிதன்! இவர்கள் தங்கள் செயல்களில் இரட்டை நிலைப் பாடுள்ள மனிதர்களாய் இருக்கிறபடியால், இவர்களுக்கு தேவனிடம் இடமே கிடையாது" என்றும் அவர் சொல்லுவார்.

விக்கிள்ஸ்வொர்த் தமது கூட்டங்களில் நடைபெற்ற எந்த ஒரு அற்புத சுகங்களுக்கும், தன்னைக் காரணம் காட்டி, அந்தப் புகழ்ச்சியை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

**ஆண்டவர் இயேசு ஒருவர் மாத்திரமே எல்லா புகழ்ச்சிக்கும், கனம் மகிமைக்கும் பாத்திரர் என்று கூறியதுடன், தன்னைப் புகழ்ந்த மக்களை வன்மையாக கடிந்து கண்டித்தார்!**

பெருமையினால் எழக்கூடிய கொடிய ஆபத்தை விக்கிள்ஸ் வொர்த் நன்றாக அறிந்திருந்தார். தனக்கும் தன் ஆண்டவருக்குமுள்ள

*பரிசுத்த உறவுக்குள் இந்தக் 'கொடிய பெருமை' வந்து ஆக்கிரமிப்பு செய்துவிடாதபடி அதைக் கண்ணும் கருத்துமாக கண்காணித்து வந்தார்! தாழ்மையிலேயே நிலைத்திருந்தார்!*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் ஊழிய குறிப்பு*

---

### சீஷர்கள் எங்கே? அங்குதான் கிறிஸ்துவின் சபை உண்டு!

*நமதாண்டவர் செய்த ஊழியத்தால் நான்குதிசையிலும் பெரிய அசைவு உண்டாயிற்று. அவருடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாப மாயிற்று! திரளான ஜனங்கள் கலிலேயா, யூதேயா, இதுமேயா, யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள பெரேதுயா முதலான இடங்களி லிருந்து வந்து அவரைப் பின்சென்றார்கள். அவரைத் தொட்டாலே போதுமென்று அவரை நெருக்கினார்கள்! அவரைக் குறித்து அவர்களுக்கிருந்த மதிப்பும் உற்சாகமும் கொஞ்சமல்ல. ஜனங்க ளுடைய மதிப்பு அதிகரித்ததுபோலவே, அதிகாரிகள் பகையும் அதிகரித்தது. அவர்கள் அவரைக் கொன்றுபோடத் தீர்மானித்தும், ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள். தாம் சீக்கிரத்தில் அவர்களால் கொல்லப்படபோவது ஆண்டவருக்குத் தெரியும். தமது ஊழியம் தமது மரணத்தோடு ஒழிந்துபோகாமல் எந்நாளும் நடந்தேற வேண்டுமெனச் சித்தங்கொண்டார். திரள்கூட்டம் அவரைப் பின்சென்ற போதிலும் எல்லாரையும் அவர் நம்பவில்லை. அவர்கள் அவர் உபதேசத்தை ஆவலோடு கேட்டார்கள். அவர் செய்த கிரியைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவரை நல்ல போதகராக மதித்தார்கள்.* **ஆகிலும், எல்லாரும் அவருக்குச் சீஷராக வில்லை!** *முடிவுபரியந்தம் நிலைநிற்கவுமில்லை! சீஷனுடைய நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றவுமில்லை! இக்காலத்தில், ஒரு கிராமத்தார் கொஞ்சம் இணங்கினால், நாம் சந்தோஷத்தோடு அவர்களை மார்க்கத்தில் சேர்த்துக் கொள்கிறோம்!*

**நமக்குத் தொகை பிரியம்!.... ஆண்டவருக்கு உண்மை பிரியம்! அவர் மனுஷருள்ளத்தை அறிந்தவரானதால், புறம்பான எழுப்புதலில் மயங்குகிறவரல்ல. தமக்குச் சீஷராவது லேசான காரியமல்லவென்று திட்டமாய் போதித்தார்!**

*ஒருசமயம் வேதபாரகனொருவன் அவரிடத்தில் தனித்து வந்து: போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். இப்படித் தன்னை ஒப்புவிக்கக்கூடிய சீஷன் யார்? 'வார்த்தைகளை மாத்திரம் பார்த்தால்' நிகரற்ற பிரதிஷ்டைபோல் தோன்றுகின்றன! ஆனால் ஆண்டவரோ, அவன் நோக்கத்தை*

*அறிந்திருந்தார்! அவன் உலகசிந்தையுள்ளவன். கிறிஸ்துவோடு சேர்ந்து கொண்டால், அவர் இராஜ்ஜியத்தில் தனக்கு மேன்மையான பதவி கிடைக்கும் என்று எண்ணி அப்படிச்சொன்னான். "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று சொன்னார். ஆண்டவர் கொடுத்த உத்தரவால் அவனுடைய அந்தரங்கம் வெளிப் பட்டது! தன்னை உற்சாகமாய் பிரதிஷ்டை செய்த வேதபாரகன், மறுவார்த்தையின்றி வந்தவழியே திரும்பினான்!*

*அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரைப்பார்த்து: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டான். இக்காலத்தில் கிறிஸ்தவர்களாகும்படி விரும்புகிற இந்து சிநேகிதர்கள் சிலசமயம் இதைப்போல் சொல்லுகிறதுண்டு. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், தாயாருக்கு ஒன்று ஆனவுடன், அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்துவிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறேன் என்பார்கள். இதுபோலவே அந்த சீஷனும் உத்தரவு கேட்டான். அவனுடைய தகப்பன் சாகவுமில்லை. மரணப் படுக்கையில் இருக்கவுமில்லை. அவன் எப்போது மரிப்பானோ அதுவும் தெரியாது! ஆகிலும், அதுவரை வீட்டிலிருந்து ஆஸ்திகளைப் பாகம் செய்வதில் தனக்கு வரும் பங்கைப் பற்றிக்கொண்டு, பின்பு சாவகாசமாய் அவரைப்பின் செல்லலாமென்பது அவன் நோக்கம்! அவனுடைய சோதனையை ஆண்டவர் கண்டார்.*

அவன் வீடு திரும்பினால், குடும்பச்சிக்கல்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அவனைச் சூழ்ந்து கொள்ளும். அவன் திரும்பிவருவது கூடாதகாரிய மென்று ஆண்டவர் அறிவார். தமது ஊழியத்துக்குப் பிரயோஜனமா யிருக்கக்கூடியவனை இழந்துவிட ஆண்டவருக்கு மனம் வரவில்லை. ஆகையால், மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணிக் கொள்வார்கள், நீ என்னைப் பின்பற்றிவா என்று சொன்னார். இந்த சீஷன் பன்னிருவரில் ஒருவரான *பிலிப்பு* என்பது *சிலருடைய அபிப்பிராயம்!*

*வேறொரு சமயம் ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் உம்மைப் பின்பற்றுவேன், ஆகிலும் முந்திப்போய் வீட்டாரை வழியனுப்பிக்கொள்ள உத்தரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டான். முந்தின இரண்டு மனுஷருடைய குணமும் இவனில் காணப்படுகிறது. வேதபாரகனைப்போல் அவரைப் பின்பற்ற விரும்புகிறான். மற்றவனைப்போல் வீட்டையும் நினைக்கிறான். வீட்டுக்குப்போய் இன ஜனத்தாரோடு ஆலோசனை செய்தால்,*

அவர்கள் இவனை எளிதில் போகவிடுவார்களோ? பலரும் பலதைச் சொல்லும்போது அவன் தீர்மானம் நிலைக்குமா? இருமனமுள்ளவன் தன் வழியில் எப்படி நடப்பான்? ஆண்டவர் அவனுக்குச் சரியான உத்தரவு கொடுத்தார்: "கலப்பையின்மேல் கைவைத்துப் பின்னிட்டுப் பார்க்கிறவன் எவனும், தேவனுடைய இராஜ்ஜியத்துக்குத் தகுதி யுள்ளவனல்ல" என்றார்.

எலியா, எலிசாவை அழைத்தபோது அவன் கை கலப்பையில் இருந்தது. எலியா அவன்மேல் தன் சால்வையைப் போட்டவுடனே அவன் தன் மாடுகளைவிட்டு எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் தாயையும் முத்தம் செய்ய உத்தரவு கொடும், பின்பு உம்மைப் பின் தொடருவேன் என்றான். அப்படியே எலிசா வீட்டுக்குப்போய் விருந்து செய்து தாமதியாமல் எலியாவுக்குப் பின்சென்றான். இவ்விருவருடைய காரியமும் ஒன்றல்ல. எலிசா, எலியாவினிடத்தில் தானே வலியவந்து நான் உம்மைப் பின் செல்லுவேன் என்று சொல்லவில்லை. எலியா திடீரென்று அழைத்ததினாலே பின்செல்ல தீவிரம் கொண்டான்!

ஆனால் இவனோ, ஆண்டவரிடத்தில் தானே வந்து: உம்மைப் பின் செல்லுவேன், ஆகிலும் முந்தி வீட்டுக்குப்போய் வழியனுப்பிக் கொள்ள உத்தரவுகொடும் என்று கேட்டான். **போனால் வரமாட்டான் என்பது ஆண்டவருக்குத் தெரியும்.** அவர் மனுஷர் உள்ளத்தையும் நோக்கங்களையும் திட்டமாய் அறிந்திருந்தபடியால் விட்டுவிடுகிறார்! பின்பற்றத் திகைக்கிறவர்களைத் தைரியப்படுத்திச் சேர்த்துக் கொள்ளவும் செய்கிறார்! நம்மை இன்னாரென்று திட்டமாய் அறிந் திருக்கிற ஆண்டவருக்கு, ஒருவன் ஊழியக்காரராயிருப்பது எவ்வளவு பயபக்திக்குரிய காரியம். மனுஷருக்கென்று பார்வைக்குச் செய்கிற ஊழியம் கிறிஸ்துவின் ஊழியம் அல்லவே!

எஜமான் உலகத்தில் செய்யவந்த வேலை மகா பெரிது. அவருக்குப்பின் அது நடந்தேற வேண்டுமானால் அவருக்குச் **சீஷர்கள்** தேவை! அநேக சீஷர்கள் அவரைப் பின்சென்ற போதிலும், எல்லாரும் பிதாவின் பரமநோக்கத்தை இந்த உலகில் நிறைவேற்றி முடித்திட உதவமாட்டார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார்! எல்லாரும் கடைசிவரை நிலைநிற்கவுமாட்டார்கள்! உண்மைதான், திரள் கூட்டமான சீஷர்களுக்கு பரம இரகசியங்களை விளக்கிக் காட்டுவது கஷ்டம். **சீஷர்களின் தொகை எவ்வளவுக்கு சுருக்கமாயிருக்குமோ, அவ்வளவுக்கு அது நல்லது!** விலையேறப்பெற்ற பரம பொக்கிஷத்தை ஒப்புவிக்கத்தக்க உண்மையுள்ள சீஷர்களைத் தெரிந்தெடுக்க

*வேண்டும். அவர்கள் மாத்திரமே, உலகத்தில் தங்களுக்கு இலாபமும், மேன்மையுமாயிருப்பவைகளை 'குப்பையென' விட்டுப் பிரிந்து, தங்கள் ஆண்டவரை முடிவுபரியந்தம் பின்பற்றி நடப்பார்கள்!*

*குருவின் அடிச்சுவட்டை, அடிபிறளாமல் பின்பற்ற துடிக்கும் சீஷர்கள் எங்கே? அங்கேதான்..... அவர்களைக் கொண்டுதான், இயேசு தன்னுடைய 'பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ள முடியாத' தன் சபையைக் கட்டுவார்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## சிலுவை பாதை செல்லாமல், கல்வாரி அன்பு எனக்கில்லை!

*கல்வாரி அன்பு எனக்கும் வேண்டும்! என்ற விருப்பம் மிக உச்சிதமான விருப்பமேயாகும். ஆனால், ஆண்டவர் சென்ற சிலுவை பாதையோ "சிலுவை மரத்திற்கு" கொண்டு செல்லுமேயல்லாமல், உங்களை பூங்காவனத்திற்கு கொண்டு செல்லும் என ஒருபோதும் எண்ணிவிடாதிருங்கள். கல்வாரி அன்பை 'சோலைவனமாக' நாம் எண்ணும் எவ்வித எண்ணமும், எவ்வித சிந்தையும் தவறு! இதுபோன்றவர்களே துன்பமும் உபத்திரவமும், நிந்தையும் அவமானமும் தங்களைச் சூழும்போது திகைப்படைகிறார்கள்! அவர்கள் மனதில் எழும் எண்ணமெல்லாம், கல்வாரி அன்பு 'எளிதான பாதை' என்றே எண்ணுகிறார்கள். இவ்வாறு, இயேசு சுமந்த சிலுவை மரத்தை அற்பமாய் எண்ணுகின்றவர்கள் மாத்திரமே, துன்பத்தில் திகைப்படைந்து 'புதுமை' என எண்ணுவார்கள். சிலுவையின் பாதை, இன்னமும் அதிக கஷ்டமாய் மாறும்போது 'இது என்ன விநோதம்' என எண்ணி தூரமாய் விலகி நிற்கிறார்கள்!*

**இவ்வாறு "எனக்கு ஏன் இப்படி நடக்கிறது?" என்ற எண்ணத்திற்கு நான் இடம் கொடுத்துவிட்டால், கல்வாரி அன்பை அடையும் இலக்கை நான் தவறவிட்டு விட்டேன்! என்றே தாழ்மையான உணர்வு கொள்ள வேண்டும்!**

*நான் செல்லும் சிலுவையின் பாதை, ஏற்கெனவே நம் ஆண்டவர் சென்ற பாதை என்றும், பக்தி நிறைந்த சிலுவை மாந்தர்கள் அநேகர் சென்ற பாதை என்றும் நாம் யாவரும் உணர்ந்து வாழ்வோமாக! பேதுரு தன் நிருபத்தில் எழுதும்போது, இந்த பாதை 'புதுமை' என திகைக்க வேண்டாம் என அறிவுறுத்தினார்! இந்தப் பாதையில் நமது குருவாகிய ஆண்டவர் முன்னோடியாய் சென்றிருக்கிறார்....அதைத் தொடர்ந்து, எண்ணற்ற இயேசு பக்தர்கள் பின்தொடர்ந்து சென்றிருக்கிறார்கள் என தாழ்த்தி, அவர்கள் சென்ற பூர்வீக பாதையில் நாமும் சிலுவை ஏந்தி கல்வாரி அன்பை சுதந்தரிப்போமாக! ஆமென்.*

*– ஏமி கார்மைக்கேல்*

## மானிட அன்பு ஒழிந்து, தெய்வ அன்பு மலரட்டும்!

*உயிர்த்தெழுந்த இயேசு, தன் சீஷர்களிடம் "புசிப்பதற்கு ஏதாகிலும் உண்டா?" என கேட்டார் (யோவான்.21:5). இரவு முழுவதும் பிராயசப்பட்டும்* **"ஒன்றும் இல்லை!" என்றே நேர்மையாய் கூறினார்கள்.** *அதற்குப் பிறகுதான், சோர்வுற்றிருந்த அவர்களை "வாருங்கள், போஜனம் பண்ணுங்கள்!" என இயேசு அழைத்தார். அங்கு* **"தணலில்"** (FIRE) *வைக்கப்பட்ட சூடான மீனையும், அப்பத்தையும் விருந்தாக அளித்தார்! (வச.9-13). யூதா குறிப்பிடும் 'அன்பின் விருந்து' பிறருக்கு அன்பை வழங்கும்* **"உங்கள் அன்பின் விருந்து"** *என்றே குறிப்பிட்டார் (யூதா:12). இயேசுவின் சீஷர்கள் தவிர, மற்ற எவரும் "கொடுப்பதே பாக்கியம்!" என்பதை அறிந்திருக்கவில்லை! குறிப்பாய் "அன்பை"* **பிறருக்கு விருந்தாக** *கொடுத்திடும் பாக்கியமே ஒப்பற்ற சிலாக்கியம்!!*

> **உணவை சீஷர்களிடம் எதிர்பாராமல், உணவை விருந்தளிக்கும் (HOST) நபராகவே இயேசு என்றென்றும் விளங்கினார்! அவர் வழங்கிய அன்பு 'அனல் கொண்ட' (FIRE) தகிக்கும் அன்பு அல்லாமல், ஏதோ உதட்டளவில் புன்னகைக்கும் 'வெதுவெதுப்பான' அன்பு அல்ல!**

*நீங்கள் எவ்வளவுதான் பிரயாசப்பட்டு பாருங்கள்.... உண்மையான 'தகிக்கும்' தெய்வ அன்பை உங்களால் பிறருக்கு கொடுத்திட ஒருக்காலும் இயலாது! உலகத்தாரிடம் மாயமான அன்பே நிறைந்துள்ளது! ஆரம்ப நிலையில் தன் மனைவியை நேசித்த கணவனிடம், தன்னை மேய்த்துக் கொள்ளும் மாயமே இருந்தது! அந்த 'மாயம்' மறைந்ததும், மனைவியின் குறைவில்.... அவளை 'அனலாய்' நேசித்திட முடியாத 'வெதுவெதுப்பும்' சிலகாலம் கழித்து 'குளிர்ந்தும்' போய் விடுகிறது! இவர்களின் புன்னகை, நளினம், குழைவு, பணிவு..... ஆகிய அனைத்திலும் "தன்னை மேய்த்துக் கொள்ளும்" சுயநல-மாயமே துர்நாற்றம் எடுக்கிறது!*

*தணலான தெய்வீக அன்பு வேண்டும்! என பிரயாசப்படுகிறவர்கள் இன்று வெகு கொஞ்சம்!"ஒருக்காலும் ஒழியாத செல்வமாகிய" அன்பிற்கு அவர்கள் பிரயாசப்பட்டிருந்தால், நலமாய் இருந்திருக்கும். அவ்வாறு பிரயாசப்பட்டவர்களே, எத்தனை வலை வீசியும் "ஒன்றும் இல்லை!" என்ற நேர்மையான பதில் கூறுவார்கள்!!* **அவரால் அன்றி,** *தங்களால் யாதும் கூடாது (யோவான்.15:5) என்ற ஒப்பற்ற "வெறுமை இடமே" இயேசு அற்புதம் செய்யும் இடம்! அவர் வருவார், அவர்களின் தாகமுள்ள ஜெபம் கேட்பார்..... அவர்கள் இருதயத்தை 'தெய்வ அன்பால்' நிரம்பச் செய்து நடத்துவார்! (ரோமர் 5:5).*

*– T. ரத்தினகுமார்*

# ராணி மரியா வத்தலில்

## தேவ அன்பின் ஊழியத்திற்காய் பலியான சிஸ்டர்!


( AD 1954-1995 )

கேரளா மாநிலத்தில் பிறந்த இவர்கள், சிறு பிராயத்திலிருந்தே ஓர் பக்தி நிறைந்த சகோதரி. அரசு பள்ளியில், ஆரம்ப நிலை கல்வி கற்ற நாள் முதல் "நான் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும்" என்ற விருப்பத்தை சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். மேல்நிலைப் பள்ளி படிப்பு முடிந்தவுடன், 1971-ம் ஆண்டு முதல் 1974-ம் ஆண்டு வரை கான்வெண்ட்டில் உள்ள சமூக சேவை பயிற்சிகளை மேற்கொண்டார்கள். பின்பு, 'பிஜ்னூர்' St.மேரி கான்வெண்ட்டில் ஆசிரியராகப் பணியாற்றினார். கிறிஸ்துவின் சமூக சேவைக்கு 1980-ம் ஆண்டு தன்னை முழு மனதாய் இணைத்துக்கொண்டார். சில பணி மாற்றங்களுக்குப் பிறகு, 1992-ம் ஆண்டு ஆந்திராவிலுள்ள இந்தூருக்கு வந்து சேர்ந்து, கிறிஸ்துவுக்கு சமூக சேவை செய்தார்.

கிறிஸ்துவின் அன்பினால் ஏவப்பட்டு, மிக ஏழை ஜனங்களுக்கு சமூக சேவை தொண்டாற்றினார். சில நிலசுவான்தார்கள், தோட்டங்களில் வேலை செய்யும் ஏழை ஜனங்களுக்கு இவர்கள் செய்த ஊழியத்தால் வெறுப்படைந்தார்கள். வத்தலில் சகோதரியை கொலை செய்வதற்கு ஏற்பாடும் செய்தார்கள். 1995-ம் ஆண்டு பிப்ரவரி 25-ம் தேதி கர்த்தரை தொழுது முடிந்து, 'கப்பில்' என்ற இடத்திற்குச் செல்ல பஸ் நிலையத்திற்கு வந்தார்கள். அப்போதுதான், கொலைவெறி கும்பலில் இருந்த சமந்தர்சிங் என்ற பெயருடையவன், பஸ்ஸில் பயணிப்பவன் போல் ஏறினான். 'லிசா ரோஸ்' என்ற கன்னியாஸ்திரீ வத்தலியை வழியனுப்பி வைத்தார்கள். மூன்று பேர் கொண்ட குழுவிலிருந்த சமந்தர்சிங், சிஸ்டர் வத்தலில்லை கத்தியால் சுமார் 40 இடங்களில் குத்தி அவர்களை பஸ்ஸில் இருந்து இழுத்து சாலையோரத்தில் போட்டான். பஸ்ஸில் இருந்த பயணிகள் பயந்துபோய் சிதறி ஓடிவிட்டார்கள். இந்த கொலை செயல் வேகமாய் பரவ இந்தூர் பிஷப், மற்றும் சில பாதிரிமார்கள் வத்தலிலின் இறந்த உடலை மீட்டு, தங்கள் ஸ்தலத்தில் வைத்தார்கள்.

வத்தலில்லை கொலை செய்த சம்மந்தர்சிங் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டான். சிறைக்குச் சென்று, வத்தலில்லின் உடன் பிறந்த சகோதரி, சம்மந்தர்சிங்கை சந்தித்து அவனை 'மனப்பூர்வமாய் மன்னித்து விட்டதாக' கூறினாள். அதிர்ச்சியுற்ற சமந்தர்சிங் தன் கொடிய செயலிலிருந்து மனந்திரும்பி, தன்னை மன்னிக்கும்படி கண்ணீரோடு வேண்டினான். வத்தலில்லின் தாயார் அவன் கையில் முத்தம் செய்து, தன் மன்னிப்பை தெரிவித்தார். வத்தலில்லுக்கு நடந்த பாராட்டு விழாவில் சமந்தர்சிங் கலந்து கொண்டு, மனந்திரும்பிய தன் கண்ணீர் அஞ்சலியை செலுத்தினான்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## சாட்சியாய் வாழ்ந்த பக்தர்களின் புத்தகம், இரட்சிப்பை கொண்டுவரும்!

இல்லினாய்ஸ் என்ற பட்டணத்தில் டைவ்ஸ் என்ற தெருவிலுள்ள ஒரு ஐசுவரியமுள்ள மனிதரின் வீட்டின் கதவை கர்த்தருடைய ஓர் ஊழியர் தட்டி நின்றார். அப்பொழுது வீட்டின் எஜமாட்டி வந்து "ஐயா, உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்கள். "கிறிஸ்தவ கைப்பிரதி கழகத்தின் தனித்தாள் ஊழியர் நான். அதோ கூடையில் இருக்கும் சிறந்த பக்தர்களின் கிறிஸ்தவ புத்தகங்களை நான் விற்பனை செய்வதற்காக இங்கு வந்திருக்கின்றேன்" என்று பதிலளித்தார். "எங்கள் வீட்டில் ஒரு பெரிய கிறிஸ்தவ புத்தகசாலையே இருக்கின்றது" என்று அந்த அம்மையார் கூறினார்கள். அந்த கூர்மையான பதிலில் மனமடிந்து விடாமல், தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, அந்த பெரிய வீட்டை ஒரு தடவை சுற்றும் முற்றும் பார்த்தவராக "ஆனால், உண்மையில் நான் ஜாண் பன்னியன், ரிச்சர்ட் பாக்ஸ்டர், ஃப்ளேவல் போன்ற பக்த சிரோன்மணிகளின் கால்களாக நான் இருந்துகொண்டு, அவர்களுடைய புத்தகங்களைக் கொண்டு வந்திருக்கின்றேன். அந்த பரிசுத்த பக்தர்கள் எல்லாரும் அதோ அந்தக் கூடையில்தான் இருக்கின்றனர்" என்று சொன்னார். "வெறுமனே கிறிஸ்தவ புத்தகங்களை மட்டும் விற்பனை செய்து கொண்டு செல்லுபவன் நான் அல்ல. அவைகள், கிறிஸ்துவை வாழ்ந்து காண்பித்த பரிசுத்தவான்களின் புத்தகங்கள்! என கூறினார். அந்த அம்மையாரோ "நான் இங்குள்ள சபையின் அங்கத்தினன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என்று அம்மையார் பதில் அளித்தார்கள். "உங்களைப்போல நானும் ஒரு சபையின் அங்கத்தினன்தான். ஆனால், ஆண்டவர் நமது தேவாலயத்துக்கு வந்து, தேவாலயத்தின் பதிவேடுகளைப் புரட்டி, நமது பெயர் அங்கு பதிவு பண்ணப்பட்டிருக்கின்றதா? என்பதைப் பாராமல் நமது பெயர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றதா? என்பதை மட்டும்தான் பார்ப்பார் என்பதை நீங்கள் மறக்கக்கூடாது" என்றார் ஊழியர்! "உண்மைதான், நாம் எந்த ஒரு சபை பிரிவையும் மாத்திரம் சார்ந்திருப்பது மட்டும் போதாது. நீங்கள் என்னுடைய பரிசுத்த தாயாரைப்போன்று பேசுகின்றீர்கள். இப்போது, என் இரட்சகரை என் இருதயத்தில் ஏற்றுக்கொள்கிறேன்" என கண்ணீரோடு ஜெபித்தார்கள்.

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.